முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.222/2021**

**(LW-7) (PW -3)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | மதம் | |
| **த.பெ.** | ஜானகிராமன் | தொழில் | |
| ஊர் | விழுப்புரம் | வயது | 30 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 29,10,2025 |

இன்று (29.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. எதிரி ஆஜர். சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் விழுப்புரத்தில் பாப்பாரகுளத்தில் வசித்து வருகிறேன் . நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான் எனது நண்பருடன் விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது அங்கிருந்த போலிசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் 2 தாள்களில் கையெழுதது போட்டுக் கொடுத்தேன் அந்த தாள்களில் என்ன எழுதப்பட்டுளள்து என்று எனக்கு தெரியாது . எதிரி சிலம்பரசன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைய தான் அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ 3**. 13.6.2018 தேதியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையத தான் அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ 4.**

சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறு்க்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 13.6.2018 தேதியில் பகல் சுமார் 9.30 மணிக்கு விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் அருகே நானும் எனது நண்பர் கார்த்திக் என்பவரும் இருந்தபோது விழுப்புரம் மேற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் ஆஜர் எதிரியை எங்கள் முன்பு விசாரித்தபோது எதிரி தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் , அந்த ஒப்புதல் வாக்குமூல தகவல் படி ஆஜர்படுத்திய கத்தியை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும் போலிஸ் விசாரரணையில சொல்லிவிடடு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
**Sd/-A.Tamilselvan,M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram